முழுப்பதிப்புரிமையுடையது

01/00/N/T/237

அந்தரங்கமானது

NEW


# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2017

# 22 – தமிழ்மொழியும் இலக்கியமும்

(புதிய பாடத்திட்டம்)

## புள்ளி வழங்கும் திட்டம்



இது, பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

**22 | T | I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

| | | |
|---|---|---|
| දෙමළ භාෂාව හා සාහිත්‍යය | I, II | පැය තුනයි |
| தமிழ் மொழியும் இலக்கியமும் | I, II | மூன்று மணித்தியாலம் |
| Tamil Language and Literature | I, II | Three hours |

## தமிழ் மொழியும் இலக்கியமும் I

**கவனிக்க :**

(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் I இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.

(ii) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

(iii) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.

(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

● தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

1. 'முழங்கு **திரைப்** புனலருவி…' - இங்கு திரை என்பது
   (1) மறைப்பு (2) ஆடை (3) அலை (4) வரி

2. '**பங்கப்** பழனத் துழுமுழவர்….' - இங்கு பங்கம் என்பது
   (1) தாமரை (2) பாதிப்பு (3) பங்கீடு (4) சேறு

3. 'நாயனையார் **கேண்மை** தழீஇக் கொளல் வேண்டும்.' - கேண்மை என்பதன் எதிர்க்கருத்து
   (1) கேட்காமை (2) நன்மை (3) தீமை (4) பகைமை

4. 'நாவலர் அவர்களின் காசம் அவர்களுக்கு எதிர்பாராத **அனுகூலம்** அளித்தது.' - அனுகூலம் என்பதன் எதிர்க்கருத்து
   (1) பிரதிகூலம் (2) நிர்மூலம் (3) ஊனம் (4) சகுனம்

5. 'இரவு பகல் **பல மூல சாகம்** நுகர்ந்து உயிர் வாழ்தல் இனிது நன்றே.' - இங்கு பல மூல சாகம் எனும் சொற்றொடரால் குறிப்பிடப்படுவன, முறையே
   (1) கிழங்கு, பழம், இலை (2) பழம், கிழங்கு, இலை
   (3) இலை, பழம், கிழங்கு (4) இலை, கிழங்கு, பழம்

● பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

6. 'பாரிய வழக்குகளுக்கும் அப்பீல்களுக்கும் அவரை நியமிப்பது வழக்கம்.' - அப்பீல் என்பதற்கு நிகரான தமிழ்ச் சொல்
   (1) முறையீடு (2) குற்றச்சாட்டு (3) மேன்முறையீடு (4) பிடியாணை

7. ஒத்தகருத்துள்ள சொற்களின் இணைப்பு
   (1) எதிர்வாதம் - பிரதிவாதம் (2) மந்தமாருதம் - சண்டமாருதம்
   (3) சௌக்கியம் - அசௌக்கியம் (4) கதி - நிர்க்கதி

8. சினிமா, இலக்கியம் முதலான கலைத்துறைகளில் சிம்பல் (Symbol) ஓர் உத்தியாக இடம்பெறுகிறது. - இங்கு சிம்பல் என்பதற்கு நிகராகத் தமிழில் வழங்கும் கலைச்சொல்
   (1) வடிவம் (2) குறியீடு (3) படிமம் (4) சின்னம்

9. ஒலி, பாம்பு என்னும் பொருள்களைத் தரும் சொல்
   (1) பணி (2) ஓசை (3) சர்ப்பம் (4) அரவம்

10. பிடி என்பது பெண் யானையைக் குறிப்பது போல, பெண் குரங்கைக் குறிக்கும் சொல்
(1) கடுவன் (2) பறழ் (3) மந்தி (4) பிணை

11. பின்வருவனவற்றுள் இணைமொழி அல்லாதது
(1) பச்சைப்பசேல் (2) தோட்டந்துரவு (3) சூதுவாது (4) இன்னார் இனியார்

12. உற்சாகமூட்டல் என்னும் பொருள்தரும் மரபுத்தொடர்
(1) தட்டிப்பறித்தல் (2) தட்டிக்கொடுத்தல் (3) தட்டிப்பேசுதல் (4) தட்டிப்பார்த்தல்

13. புதிதாகச் செய்யப்பட்ட தேர், கப்பல் என்பவற்றை முதன்முதலாக ஓட்டிப்பார்த்தலைக் குறிக்கும் மரபுச்சொல்
(1) வெள்ளோட்டம் (2) ஒத்திகை (3) அரங்கேற்றம் (4) மேலோட்டம்

14. அரசனுடைய சபா மண்டபத்தைக் குறிக்கும் சொல்
(1) அந்தப்புரம் (2) உப்பரிகை (3) நிந்தகம் (4) ஓலக்கம்

15. தங்களைச் சார்ந்தவர்களின் குறைகள் பொருட்படுத்தப்படுவதில்லை என்பதை உணர்த்தும் பழமொழி
(1) இக்கரைக்கு அக்கரை பச்சை
(2) காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு
(3) இமைக் குற்றம் கண்ணுக்குத் தெரியாது
(4) தனக்கு வந்தால்தான் தெரியும் தலைவலியும் காய்ச்சலும்

16. காலத்தே பயிர்செய் என்ற பழமொழியின் கருத்து
(1) பயிரிடுவதற்கென்று காலம் வரையறுக்கப்பட்டுள்ளது.
(2) உரிய காலத்தில் எதையும் செய்துவிட வேண்டும்.
(3) பருவ காலங்கள் பயிர்ச்செய்கைக்கு உகந்தவை.
(4) காலந் தவறிப் பயிர் செய்தால் விளைச்சல் குறையும்.

17. பயனற்ற செயலை உணர்த்தும் உவமைத்தொடர்
(1) அணை கடந்த வெள்ளம் போல (2) ஆனை வாயிற் கரும்பு போல
(3) ஆற்றிலே கரைத்த புளி போல (4) ஆனை உண்ட விளாம்பழம் போல

18. செழிப்போடு அழிவின்றி வாழ ஒருவரை வாழ்த்துவதற்குப் பொருத்தமான அருஞ்சொற்றொடர்
(1) ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி (2) கண்ணுக்குக் கண்ணாக
(3) நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் (4) வைத்தகண் வாங்காமல் பார்த்துப் பார்த்து

19. 'குறுகுறு நடந்து சிறுகை நீட்டி' - இங்கு குறுகுறு என்பது
(1) அடுக்குத்தொடர் (2) இணைமொழி
(3) ஒலிக்குறிப்புச்சொல் (4) இரட்டைக்கிளவி

20. 'ஆத்திரத்தோடு நண்பர் அவுக்கென எழும்பி இரண்டில் ஒன்று பார்ப்பது என்று பாய்ந்து வந்தார்.' - இங்கு அவுக்கென என்னும் ஒலிக்குறிப்புச் சொல் உணர்த்தும் பொருள்
(1) கோபம் (2) பயம் (3) விரைவு (4) ஆச்சரியம்

● பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க.

21. ககரம் எந்தச் சொல்லில் 'h' என்னும் ஆங்கில எழுத்துக்கு நிகராக ஒலிக்கிறது ?
(1) கடல் (2) தங்கம் (3) கதவு (4) மேகம்

22. பின்வருவனவற்றுள் பகுபதம்
(1) பாடல் (2) சிங்கம் (3) களம் (4) அன்பு

23. பின்வருவனவற்றுள் ஆக்க வினையடை
(1) நேற்று (2) அங்கே (3) விரைவாக (4) காலையில்

24. ஓடு என்னும் உருபு அடைமொழிப் பொருளில் இடம்பெற்ற தொடர்
(1) அன்போடு பேசினான். (2) பாலோடு கலந்தான்.
(3) நண்பனோடு சென்றான். (4) வீட்டோடு இருந்தான்.

25. தோன்றல் விகாரப் புணர்ச்சி இடம்பெற்ற சொல்
(1) பலாப்பழம் (2) மாமரம் (3) மரவேர் (4) மரக்கொப்பு

26. பாடசாலைக்குச் செல்லவில்லை. - இங்கு செல்லவில்லை என்பது
(1) தன்மை வினைமுற்று (2) படர்க்கை வினைமுற்று
(3) முன்னிலை வினைமுற்று (4) மூவிடத்துக்கும் பொதுவான வினைமுற்று

27. 'என்றலுமே அடியின்மிசை நெடிது வீழ்ந்து அழுவானை...' - இங்கு அழுவான் என்பது
(1) தெரிநிலை வினைமுற்று (2) குறிப்பு வினைமுற்று
(3) வினையாலணையும் பெயர் (4) இடுகுறிச் சிறப்புப்பெயர்

28. அகராதி ஒழுங்கில் **அமையாத** சொற்றொகுதி
(1) காடு, நாடு, பாடு, வாடு (2) ஞாயிறு, சந்திரன், சூரியன், செவ்வாய்
(3) கட்டில், சட்டி, தாய், நாடு (4) வாய்க்கால், விலை, வேர்க்கடலை, வெளவால்

● **பொருத்தமற்ற** உதாரணம் இடம்பெற்ற சொற்றொகுதியைத் தெரிவுசெய்க.

29. (1) பெயர்ச்சொல் : பால், மரம், மாலை
(2) வினைச்சொல் : வந்தான், இல்லை, விழுந்த
(3) பெயரெச்சம் : வந்த, பாடுகின்ற, விழுந்து
(4) வினையெச்சம் : ஓடி, படித்து, பாடுவதற்கு

30. (1) வேற்றுமைத்தொகை : மரம் தறித்தான், பாடசாலை சென்றான், தங்க வளையல்
(2) வினைத்தொகை : ஏவுகணை, ஓடுமீன், சுடுசோறு
(3) பண்புத்தொகை : கரும்பலகை, வெண்மேகம், செந்தாமரை
(4) உம்மைத்தொகை : வெற்றிலை பாக்கு, பழப்பாக்கு, பாக்கு வெற்றிலை

● புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

31. உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்ட பலர் தமது ...................... இழந்தனர்.
(1) சந்தாப்பணத்தை (2) கட்டுப்பணத்தை
(3) முற்பணத்தை (4) சலுகைப்பணத்தை

32. வரவுசெலவுத்திட்டத்தில் துண்டுவிழும் தொகையை ஈடுசெய்வதற்காக அரசாங்கம் புதிய ...................... விதிக்கவுள்ளது.
(1) பிரேரணைகளை (2) கடன்களை
(3) மானியங்களை (4) வரிகளை

33. விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் பொருட்டு விவசாயிகளுக்கு உர ...................... வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
(1) நிவாரணம் (2) மானியம்
(3) ஊதியம் (4) சன்மானம்

34. இராஜராஜ சோழனுடைய பெருமைகளை எடுத்துரைக்கின்ற ...................... பல சாசனங்களிலே காணப்படுகின்றன.
(1) ஆவணங்கள் (2) புனைந்துரைகள்
(3) கீர்த்தனைகள் (4) மெய்க்கீர்த்திகள்

● வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவுசெய்க.

35. உலகிலுள்ள தொழில் ஒவ்வொன்றும் தனித்துவமானதும் அத்தியாவசியமானதுமாக ............
(1) விளங்குகின்றன. (2) விளங்குகின்றது.
(3) அமைகின்றன. (4) கொள்ள வேண்டியன.

36. மாணவர் குழுக்கள் ஊரூராகச் சென்று வெள்ள நிவாரணத்துக்காக பொருள்களையும் பணத்தையும் ............
(1) சேகரித்தன. (2) சேர்த்தார்கள். (3) சேர்த்தார். (4) சேகரித்தனர்.

● தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.

தென்னங் குரும்பைபோல் தலையே - கறுத்துச்
சிறுத்த மிளகுபோல் கண்கள்
முன்னும் பின்னும் சிறு கால்கள் - வளையும்
முதுகில் இரண்டு வெண்கோடு
கன்னங் கரிய கோட்டுடனே - தினையின்
கதிரைப் போன்ற நெடுவாலே
தின்னும் கொய்யா மரத்தினிலே - தாவிச்
செல்லும் துள்ளும் அணிற்பிள்ளை.

37. இங்கு கவிஞர் கூறுவது அணிற்பிள்ளையின்
(1) தோற்றம் பற்றி.
(2) செயற்பாடு பற்றி.
(3) தோற்றமும் செயலும் பற்றி.
(4) சுறுசுறுப்புப் பற்றி.

38. இப்பாடலில் எத்தனை உவமைகள் இடம்பெற்றுள்ளன ?
(1) இரண்டு
(2) மூன்று
(3) நான்கு
(4) ஐந்து

39. இங்கு 'கன்னங்கரிய' என்பது
(1) அடுக்குத்தொடர்
(2) இணைமொழித்தொடர்
(3) உவமைத்தொடர்
(4) அடுக்கிடுக்குத்தொடர்

● கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவுசெய்க.

40. அ - இன்பம் வரும்போது மகிழ்கிறோம்.
ஆ - அந்த இரண்டும் எல்லோரது வாழ்க்கையிலும் வந்து போகின்றன.
இ - ஆனால் துன்பம் வரும்போது துவண்டுவிடுகிறோம்.
ஈ - இன்பமும் துன்பமும் கலந்ததே உலகம்.
உ - அவ்வாறன்றி இன்பத்தையும் துன்பத்தையும் சமமாக ஏற்றால் எமது வாழ்க்கை அமைதி நிறைந்ததாய் அமையும்.
(1) ஈ, ஆ, அ, இ, உ
(2) உ, ஈ, இ, ஆ, அ
(3) இ, ஈ, அ, உ, ஆ
(4) ஆ, உ, இ, அ, ஈ

* *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහස්‍යයි
அந்தரங்கமானது

NEW

අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2017
க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2017

| විෂයය අංකය பாட இலக்கம் | 22 | විෂයය பாடம் | தமிழ்மொழியும் இலக்கியமும் |
|---|---|---|---|

## I පත්‍රය - පිළිතුරු
## I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 1 | 21. | 4 | 31. | 2 |
| 02. | 4 | 12. | 2 | 22. | 1 | 32. | 4 |
| 03. | 4 | 13. | 1 | 23. | 3 | 33. | 2 |
| 04. | 1 | 14. | 4 | 24. | 1 | 34. | 4 |
| 05. | 2 | 15. | 3 | 25. | 1 | 35. | 2 |
| 06. | 3 | 16. | 2 | 26. | 4 | 36. | 1 |
| 07. | 1 | 17. | 3 | 27. | 3 | 37. | 3 |
| 08. | 2 | 18. | 1 | 28. | 2 | 38. | 2 |
| 09. | 4 | 19. | 4 | 29. | 3 | 39. | 4 |
| 10. | 3 | 20. | 3 | 30. | 4 | 40. | 1 |

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින் / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை: 25/40

I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி: 25/40

# தமிழ்மொழியும் இலக்கியமும் - II

## வினா 01 - சுருக்கவிடை வினாக்கள்

1. சந்தி பிரித்து எழுதும் திறனை மதிப்பிடல்.
2. இலக்கண அறிவைப் பொருத்தமான இடத்தில் பிரயோகிக்கும் திறனை மதிப்பிடல்.
3. நடைமுறைத் தேவைகளுக்காக எழுதும் நுட்பங்களை மதிப்பிடல்.
4. மொழிவளம் தொடர்பான அறிவை மதிப்பிடல்.
5. குறியீடுகளைப் பொருத்தமான இடங்களில் இடுதலை மதிப்பிடல்.

## வினா 02 - கட்டுரை எழுதுதல்

1. கொடுக்கப்பட்ட வழிகாட்டற் குறிப்புக்களை அடியொற்றி, பொருட் பொருத்தமாகவும் தேவையான அளவுக்கும் உரிய தலையங்கம் இட்டும் கட்டுரை எழுதும் திறனை மதிப்பிடல்.
2. கருத்துக்களை ஒழுங்குபடுத்திக் கட்டுக் கோப்பாக வெளிப்படுத்தும் திறனை மதிப்பிடல்.
3. வழுக்களின்றியும் வளமான மொழிநடையிலும் எழுதும் ஆற்றலை மதிப்பிடல்.
4. விளக்கி எழுதும் திறன், கற்பனை ஆற்றலுடன் எழுதும் திறன், கருத்துக்களை வெளிப்படுத்தி உரையாடல் பாங்கில் எழுதும் திறன், விவாதித்து எழுதும் திறன், கதை எழுதும் திறன் ஆகியவற்றைக் கணிப்பிடல்.
5. கட்டுரை வகை, கட்டுரை அமைப்பு என்பவற்றை அனுசரித்து, எடுத்துக்கொண்ட விடயம் பற்றிக் கட்டுரை நிறைவு பெறும் வகையில் எழுதும் திறனைக் கணிப்பிடல்.
6. குறிப்பிட்ட சொற்களுக்குள் எழுதப்பட்டுள்ளதா என்பதைக் கணிப்பிடல்.

## வினா 03 - சுருக்கம் எழுதுதல்

1. உரைநடைப் பகுதியை வாசித்து கிரகித்து அதன் பிரதான கருத்து, துணைக்கருத்துக்கள் என்பவற்றை இனங்காணலை மதிப்பிடல்.
2. இனங்கண்ட கருத்துக்களைச் சுருக்கமாகவும், தெளிவாகவும் சொந்த மொழிநடையில் எழுதும் திறனை மதிப்பிடல்.
3. குறிப்பிட்ட அளவு சொற்களுக்குள் சாராம்சம் எழுதப்படுவதை மதிப்பிடல்.
4. உதாரணங்கள், மேற்கோள்கள், மேலதிக விளக்கங்கள், கூறியது கூறல் முதலியன சுருக்கத்தில் இடம்பெறக் கூடாது. இவற்றைத் தவிர்த்துச் சுருக்கம் எழுதப்பட்டுள்ளதா என அவதானித்து மதிப்பிடல்.
5. சுருக்கம் எழுத வேண்டிய முறையை அனுசரித்து எழுதுகின்றனரா என்பதைப் பரீட்சித்தல்.

## வினா 04 - கிரகித்தல்

பாடற்பகுதியினை நன்கு வாசித்துக் கிரகித்துக் கேட்கப்பட்ட வினாக்களுக்குப் பொருத்தமாக விடையளிக்கும் திறனை மதிப்பிடல்.

## வினா 05 - கடிதம் /துண்டுப்பிரசுரம் எழுதுதல்.

1. கடிதத்திற்கான / துண்டுப் பிரசுதரம் எழுதுவதற்கான அமைப்பு முறையை அனுசரித்து எழுதுந் திறனை மதிப்பிடல்.
2. வழங்கப்பட்ட வழிகாட்டற் குறிப்புக்களைக் கருத்திற்கொண்டு கடிதம் / துண்டுப் பிரசுரம் எழுதப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சித்தல்.
3. மொழிநடையையும் வெளிப்பாட்டுத் திறனையும் மதிப்பிடல்.
4. குறிப்பிட்ட சொற்களுக்குள் எழுதப்பட்டுள்ளதா என்பதைக் கணிப்பிடல்.

# தமிழ்மொழியும் இலக்கியமும் - II

| | | | |
|---|---|---|---|
| வினா இல. | 01. | சுருக்க விடைகள் | - 20 புள்ளிகள் |
| | 02. | கட்டுரை | - 25 புள்ளிகள் |
| | 03. | சுருக்கம் | - 10 புள்ளிகள் |
| | 04. | கிரகித்தல் | - 10 புள்ளிகள் |
| | 05. | கடிதம் / துண்டுப்பிரசுரம் | - 15 புள்ளிகள் |
| | | மொத்தம் | 80 புள்ளிகள் |

# பகுதி II

**1.** சுருக்கமான விடை எழுதுக.

(i) பின்வரும் தொடரைச் சந்திபிரித்து எழுதுக.

'மெலிந்தப் பிறைக்கும் விழி'

மெலிந்து அப்பு இறைக்கும் விழி

மெலிந்து + அப்பு + இறைக்கும் + விழி

(ii) "புத்தகத்தை எடுத்துட்டு வூட்ட வா மனே" என்ற பேச்சு வழக்கு வாக்கியத்தை எழுத்து வழக்குக்கு மாற்றி எழுதுக.

புத்தகத்தை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு / வீட்டுக்கு வா மகனே

(iii) 'எழுவான் திசையை யாரேனும் சுட்டுவீராயின்...' இங்கு 'எழுவான் திசை' என்பது எத்திசையைக் குறிக்கிறது ?

கிழக்குத்திசை / குணதிசை / கீழ்த்திசை

(iv) 'வேட்டைநாய் போல அவள் முன்னே ஓடிச் செல்கிறது நிழல்.' இதில் பயின்றுள்ள அணி யாது ?

உவமையணி

(v) 'ஒற்றைக்காலில் நிற்றல்' என்ற மரபுத்தொடர் குறிக்கும் பொருள் யாது ?

விடாப்பிடியாக நிற்றல் / பிடிவாதம் பிடித்தல்

(vi) அப்பால் மூழ்கிற்று கதிர் நெடுங்கடலுள். - இவ்வாக்கியத்திலுள்ள எழுவாய், பயனிலையினை எடுத்துக்காட்டுக.

எழுவாய் - கதிர்

பயனிலை - மூழ்கிற்று

(vii) பின்வரும் வாக்கியத்துக்கு மிகப்பொருத்தமான நிறுத்தக் குறியினையிட்டு அதனை மீண்டும் எழுதுக.

'ஆகா மலையிலே வழிந்தோடும் நீரருவியின் அழகுதான் என்னே'

'ஆகா! மலையிலே வழிந்தோடும் நீரருவியின் அழகுதான் என்னே!'

(viii) பின்வரும் வாக்கியங்களை இணைத்து ஒரே வாக்கியமாக்குக.

(அ) நான் கொழும்புக்குப் போனேன்.

(ஆ) நீ கொழும்புக்குப் போனாய்.

நானும் நீயும் / நீயும் நானும் கொழும்புக்குப் போனோம்.

(ix) தரப்பட்ட கூட்ட நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துக.

பிரதம விருந்தினர் உரை, நன்றியுரை, தமிழ் வாழ்த்து, வரவேற்புரை, தலைமையுரை

தமிழ்வாழ்த்து, வரவேற்புரை, தலைமையுரை, பிரதம விருந்தினர் உரை, நன்றியுரை.

(x) பின்வரும் வாக்கியத்திலுள்ள வழுவை நீக்கி வாக்கியத்தைச் செம்மையாக மீண்டும் எழுதுக.

கல்வி, செல்வம், வீரம், ஒழுக்கம் முதலானவை வாழ்க்கைக்கு முக்கியமானது என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ள வேண்டும். (20 புள்ளிகள்)

கல்வி, செல்வம், வீரம், ஒழுக்கம் முதலானவை வாழ்க்கைக்கு முக்கியமானவை என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். (02 x 10 = 20 புள்ளிகள்)

## வினா இல. 02 புள்ளித்திட்டம்

| | | |
|---|---|---|
| (அ) | பொருளமைவும் அளவும் | 12 புள்ளிகள் |
| (ஆ) | கருத்து வெளிப்பாடும் மொழிச் செம்மையும் | 06 புள்ளிகள் |
| (இ) | எழுத்து நுட்பங்கள் | 05 புள்ளிகள் |
| (ஈ) | தலையங்கம் | 02 புள்ளிகள் |
| | மொத்தம் | **25 புள்ளிகள்** |

**பொருளமைவும் அளவும்**

அறிவுறுத்தல்கள், வழிகாட்டற் குறிப்புகள் என்பவற்றை அனுசரித்து பொருட்பொருத்தத்துடன் கேட்கப்பட்ட சொல் அளவில் கட்டுக்கோப்பாக எழுதப்படல். கருத்துக்களில் தொடர்ச்சி காணப்படல்.

**கருத்து வெளிப்பாடும் மொழிச் செம்மையும்**

கருத்துக்களை தெளிவாக எடுத்துரைத்தல்.
பொருத்தமான மொழிப்பிரயோகம்
சொல், வாக்கியம் எழுத்து வழுக்கள் இன்மை.
தேவைப்படுமிடத்து பொருத்தமான உதாரணங்கள், மேற்கோள்கள், ஆதாரங்கள் தந்து எழுதுதல்.

**எழுத்து நுட்பங்கள்**

பந்தியமைப்பு, பந்திகளுக்கிடையே தொடர்புடைமை, குறியீடுகள் இடப்படல், உறுப்பமைவு, நேர்த்தி.

**தலையங்கம்**

பொருத்தம், சுருக்கம், கவர்ச்சி

புள்ளியிடல்

$$\text{உ+ம் } Q2 = \frac{08}{12} + \frac{04}{06} + \frac{03}{05} + \frac{02}{02} = \frac{17}{25}$$

மேற்குறிப்பிட்ட 4 அம்சங்களின்கீழ் புள்ளிகளைப் பகுத்து வழங்குக.

**2.** பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவுசெய்து, ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

(i) இன்று நமது நாட்டில் குப்பைகளை அகற்றுதல் பாரியதொரு பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. நமது நாட்டி அவற்றை அகற்றுவதற்கான வழிமுறைகளைச் சரியான வகையில் நடைமுறைப்படுத்தாத காரணத்தால் நா பாரிய அனர்த்தங்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. ஆகவே அவற்றைச் சரியான விதத்தில் நடைமுறைப்படுத் வேண்டும் என்பது தொடர்பான ஒரு **விளக்கக் கட்டுரை.**

(ii) 'ஆசிரியத்தொழில்' புனிதமானது. நமது அறிவுக்கண்களைத் திறப்பவர்களாகவும் நமது வளர்ச்சிக் ஏணிப்படிகளாகவும் ஆசிரியர்கள் விளங்குகின்றார்கள். ஆசிரியர்கள் தெய்வத்துக்குச் சமமானவர்கள். அவர்கள நாம் மதிக்க வேண்டும். அவர்களது சேவைகளைப் பாராட்ட வேண்டும் என்ற பொருள்பட ஆசிரியர் தி விழாவில் நிகழ்த்தப்படும் ஒரு **மேடைப்பேச்சு.**

(iii) உல்லாசப் பயணிகளின் வருகையால் நாட்டின் வருமானம் அதிகரித்து நாடு முன்னேற்றமடையும் எனக் கருதுப ஒருவருக்கும், நாட்டின் பண்பாடு சீரழிவதுடன் போதைப்பொருள் பாவனை, நோய்த் தொற்றுகள் ஆகியன ஏற்பட் நாடு பாதிப்படையும் எனக் கருதும் மற்றொருவருக்குமிடையிலான ஓர் **உரையாடல்.**

(iv) 'இன்று அவளுக்குப் பாராட்டுவிழா... அவள் ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கை மட்டத்தில் முதலிடம் பெற்றமைக்காக இந்த விழா நடைபெறுகிறது. ஆனால் இந்த நிலையை அடைவதற்கா அந்தச் சிறுமி பட்ட பாடுகள் சொல்லிலடங்கா...' என்ற கருப்பொருளிலமைந்த ஒரு **சிறுகதை.**

(25 புள்ளிகள்

i. விளக்கக் கட்டுரை

தலைப்பு : குப்பைகளை முறையாக அகற்றுவதற்கான வழிமுறைகள் / குப்பைகளை முறையாக அகற்றுவதன் அவசியம் / கழிவகற்றல் முகாமைத்துவத்தின் அவசியம் .
(இவை போன்ற தலைப்புக்கள்)

- வீடு, தொழிற்சாலை முதலியவற்றின் கழிவுகள் பல வகைப்பட்டனவாகச் சேர்கின்றன.
- மிதமிஞ்சிய கழிவுகள் சேகரிக்கப்பட்டு ஓரிடத்தில் குவிக்கப்படுகின்றமையும் அவற்றை அகற்றுவதற் போதிய நடைமுறைகள் பின்பற்றப்படாமையும்.
- இதனால் நோய் பரவுதல், உயிரிழப்புக்கள் முதலிய அபாயகரமான நிலைமைகள் உருவாகின்றன.
- இப்பிரச்சினையைப் போக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்
  - முறையான கழிவகற்றல் நடவடிக்கைகள் தொடர்பாகப் பொது மக்களுக்கு விழிப்பூட்டுதல்.
  - உக்கக்கூடிய கழிவுகளைப் பசளையாக்குதல்.
  - உக்காதவற்றை மீள் சுழற்சிக்கு உட்படுத்துதல்.
  - எரிக்கக் கூடியவற்றை எரித்து அழித்தல்.

  இத்தகைய நடவடிக்கைகளை உள்ளூராட்சி நிறுவனங்கள் முறையான திட்டங்களின் அடிப்படைய ஒன்றிணைந்து செயற்படுத்துதல்.

ii. மேடைப்பேச்சு

தலைப்பு : ஆசிரியத் தொழிலின் புனிதத்துவம் / ஆசிரியர்களைப் போற்றிப் பாராட்டுவோம் / ஆசிரியத் தொழில் மேன்மைக்குரியது.
(இவை போன்ற தலைப்புக்கள்)

அவதானிப்புக்குரியவை

- சபையோரை விளித்தல், வணக்கம் கூறுதல்.
- பேசப்போகும் தலைப்பைத் தொடர்புபடுத்திப் பேசுதல்.

உள்ளடங்க வேண்டியவை

- ஆசிரியர் தின விழாவின் முக்கியத்துவம்.
- உலகில் பல வகையான தொழில் முறைகள் காணப்பட்டாலும் ஆசிரியத் தொழிலுக்கு ஈடில்லை. அது புனிதமான தொழில்.
- அவர்கள் எமக்கு அறிவொளியூட்டுபவர்கள்.
- மாணவர்களின் வளர்ச்சிக்கு உதவுபவர்கள்.
- அவர்கள் தெய்வத்திற்கு ஒப்பானவர்கள்.
- அவர்களை நாம் இன்று மட்டுமல்ல என்றும் மதிக்க வேண்டும்.
- சுயநலமற்ற அவர்களது சேவை பாராட்டுக்குரியது.
- நாம் சமூகத்திற்குப் பயனுடையவர்களாக வாழ்வதே அவர்களுக்கு நாம் செய்யும் நன்றிக் கடனாகும்.
- முக்கியமான இத்தினத்தில் ஆசிரியர்களை வாழ்த்தி முடிப்பதாக அமைதல்.

iii. உரையாடல்

தலைப்பு : உல்லாசப் பயணிகளின் வருகையால் உண்டாகும் சாதக பாதகங்கள் / உல்லாசப் பயணிகளின் வருகையின் விளைவுகள்.
(இவை போன்ற தலைப்புக்கள்)

- உரையாடலில் இருவர் பங்குபற்றுதல்.
- உரையாடல் அமைப்பு இருத்தல் வேண்டும்.
- ஒருவர் கருத்தை இன்னொருவர் உள்வாங்கித் தர்க்க ரீதியாக உரையாடல் இருத்தல் வேண்டும்.

**உல்லாசப் பயணிகளின் வருகையால் உண்டாகும் சாதக பாதகங்கள்.**

சாதகங்கள்

- அன்னியச் செலாவணி அதிகரித்த அளவில் கிடைத்தல்.
- உல்லாசப் பயணிகளைக் கவரும் இடங்களும் அவற்றோடு சேர்ந்த பிரதேசங்களும் அபிவிருத்தி செய்யப்படுதல்.
- வேலை வாய்ப்புக்கள் பெருகுதல்.
- நாடு பற்றிய அபிமானம் வேறு நாடுகளிலும் பரவுதல்.

பாதகங்கள்

- பிறநாட்டார் பண்பாட்டின் ஊடுருவலால் சுதேசப் பண்பாடு சீரழிதல்.
- போதைப் பொருள் பாவனை அதிகரித்தல்.
- பாலியல் துஷ்பிரயோகம்
- நோய் பரவுதல்.

iv. சிறுகதை

தலைப்பு : முயற்சி வெற்றி தரும், புயலைத் தாங்கிய புஷ்பம், வலிகளைத் தாண்டி.......
(இவை போன்ற தலைப்புக்கள்)

- சிறுகதைகளுக்குரிய அமைப்புப் பேணப்படல்.
- வழங்கப்பட்ட கருப்பொருளுக்கமைய கற்பனைச் செறிவுடன் எழுதப்படல்.
- கதையை சுவை படவும் விறுவிறுப்பாகவும் நகர்த்திச் செல்லுதல்.
- இயல்பான, கவர்ச்சியான கதையோட்டம்.
- கதைக்குப் பொருத்தமான மொழிநடை
- இயல்பான பாத்திர உரையாடல்.
- படிப்பினையை மறைமுகமாக வெளியிடல்.
- முடிவு பொருத்தமாக அமைதல்.

3. பின்வரும் உரைப்பகுதியின் **சுருக்கத்தை 40 - 45** சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக.
(சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

சிலப்பதிகாரம் என்பது தமிழில் உள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகும். காவிரிப்பூம்பட்டினத்திலே பெருங்குடி வணிகர் குலத்தில் பிறந்த கற்புக்கரசி கண்ணகி, அவள் கணவன் கோவலன் என்பவர்களுடைய வரலாற்றை உரைப்பது. முத்தமிழ்ப் புலமையும் கவித்திறனும் வாய்ந்த இளங்கோவடிகளால் இயற்றப்பட்டது. படிப்பவர் மனதைக் கவரும் சொற்சுவையும் பொருட்சுவையும் நிறைந்தது. புகழ்மிக்க மூவேந்தர்களுடைய குளிர்ந்த சோலை என்று கருதப்படும் தமிழகத்தின் பகுதிகளாகிய சேர, சோழ, பாண்டிய நாட்டின் இயல்புகளையும் முறையே அவற்றின் தலைநகரங்களாகிய வஞ்சி, பூம்புகார், மதுரை என்பவற்றின் பெருமைகளையும் எடுத்துரைப்பது. அந்த நகரங்களிலிருந்து நல்லாட்சி புரிந்த சேர, சோழ பாண்டிய மன்னர்களின் தருமம், வீரம், அரசியல் முறைமை முதலியவற்றையும் அவர்களது ஆட்சியில் வாழ்ந்த மக்களின் ஒழுக்கம், ஊக்கம் ஆகியவற்றையும் நன்கு புலப்படுத்துவது. மற்றும் அக்கால உழவுத்தொழில், வணிகம், கைத்தொழிற் பெருக்கம், அரசியல், கல்வி, சமயநிலை முதலானவற்றையும் அறிவதற்குச் சான்றாக உள்ளது. அரசியலில் தவறுவிடும் மன்னர்களை அறம் என்ற கடவுள் தண்டிப்பார், கற்பிற் சிறந்து விளங்கும் பெண்களை அனைவரும் போற்றுவர், ஒருவர் ஒரு பிறவியில் செய்த வினைகள் அவரது பிறவிகள் தோறும் தொடரும் ஆகிய மூன்று பெரும் உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. இதனை இயல், இசை, நாடகக் காப்பியம் எனவும் உரையும் செய்யுளும் கலந்த உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் எனவும் கூத்தும் பாட்டும் இடையிடை அமைந்த நாடகக் காப்பியம் எனவும் கூறுவர். (10 புள்ளிகள்)

- ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று சிலப்பதிகாரம்.
- கோவலன், கண்ணகி வரலாற்றைக் கூறும் சிலப்பதிகாரம் இளங்கோவடிகளால் இயற்றப்பட்டது.
- மூவேந்தர்களின் பெருமை, நாட்டின் இயல்பு, தலைநகரங்களின் பெருமை ஆட்சிச் சிறப்பு அங் வாழ்ந்த மக்களின் சிறப்பு ஆகியவற்றை எடுத்துரைப்பது.
- அக்கால வாழ்வியல் முறைமையை அறிய ஆதாரமாகவுள்ளது.
- அறம் தவறல் தண்டனைக்குரியது, கற்புடை மங்கையர் போற்றப்படுவர், பிறவி தோறும் வினைக தொடரும் ஆகிய மூன்று பெரும் உண்மைகளை ஆதாரமாகக் கொண்டது.
- முத்தமிழ் காப்பியம் எனவும், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் எனவும் நாடகக் காப்பியம் எனவு இதனைக் கூறுவர்.

(10 புள்ளிகள்

சுருக்கம்

**கவனிக்க வேண்டியவை**

- பிரதான கருத்து, துணைக் கருத்துக்கள்.
- சொந்த மொழி நடையில் எழுதுதல்.
- ஒரு பந்தியாக எழுதுதல்.
- கட்டுக் கோப்பாக கருத்துச் சிதைவின்றி எழுதுதல்.
- பிரதான அம்சங்களை அனுசரித்தல்.
- தவிர்க்க வேண்டியன தவிர்க்கப்படல்.
  (கூறியது கூறல், உதாரணங்கள் முதலானவை)
- தொகை மொழிச் சொற்களைப் பயன்படுத்தல்.
- கருத்தமைவில் தொடர்ச்சி காணப்படல்.
- குறித்த சொல்லளவில் எழுதுதல்.

| | | |
|---|---|---|
| விடய உள்ளடக்கம் | - | 06 புள்ளிகள் |
| சொல்லளவு | - | 02 புள்ளிகள் |
| மொழிநடை | - | 02 புள்ளிகள் |

- 40 - 45 சொற்களுக்குள் இருத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது.
- 35 - 50 சொற்கள் வரை ஏற்றுக் கொள்ளப்படும்.
- 35 சொற்களுக்குக் குறைவாகவோ 50 சொற்களுக்குக் கூடுதலாகவோ இருந்தால் சொல்லளவிற்கான ஒரு புள்ளியைக் குறைக்கவும்.
- சொல்லளவு 50 ற்கு மேற்படின் 50 சொற்களை எல்லையாகக் கொண்டு அதற்குள் எழுதப்பட்ட விடயங்களை அனுசரித்துப் புள்ளிகளை வழங்கவும்.
- சொல்லளவு 35 ற்கு குறைவாக இருப்பின் பிரதான கருத்தின் சாராம்சங்களை அடிப்படையாகக் கொண்டு புள்ளிகளை வழங்கவும்.
- சொற்களை எண்ணும் போது நிதானமாகக் கணக்கிடவும்.

**4.** பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன்கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

பேபைரஸ், தோல், பனையோலை ஆகிய பண்டைக் காலத்து எழுதுகருவிகளில் எழுதப்பட்ட எழுத்துக்கள் முற்றுப்புள்ளி, அரைப்புள்ளி, காற்புள்ளி முதலிய குறியீடுகளைக் கொண்டிருக்கவில்லை. அன்றியும் சொற்களைத் தனித்தனியே பிரித்தெழுதாமல் ஒரே கோவையாக எழுத்துக்கள் எழுதப்பட்டன. இவ்வாறு எழுதப்பட்ட சுவடிகளைப் படிப்பது கடினமாகவும் வருத்தமாகவும் இருந்தது. பழக்கப்பட்டவர்கள் மட்டுமே இவற்றைப் படிக்க முடியும். பழக்கப்பட்டவர்களுக்கும் தொடரைப் புரிந்துகொள்வது கடினமாக இருந்தது. மேல்நாட்டார், கி.பி. இரண்டாம் நூற்றாண்டில், சொற்களைப் பிரித்து எழுதத் தொடங்கினார்கள்; இன்னும் பிற்காலத்தில் புள்ளிகள் முதலிய குறியீடுகளை வழங்கினார்கள். நமது நாட்டு ஓலைச்சுவடிகளில் முற்றுப்புள்ளி முதலிய குறியீடுகள் அமைக்கப்படவில்லை.

(i) பண்டைக்காலத்தில் எழுதுகருவிகளாகப் பயன்பட்டவை யாவை ?

(ii) பண்டைக்காலத்தில் எழுதப்பட்ட சுவடிகளைப் படிப்பது கடினமானதாக இருந்தமைக்கான காரணங்கள் யாவை

(iii) எழுத்து வழக்கில் குறியீடுகளை முதன்முதலில் பயன்படுத்தியவர்கள் யார் ?

(iv) சுவடிகள் படிப்பதை இலகுவாக்க, முதலில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யாது ?

(v) இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுத்தக் குறிகள் எவை ? (10 புள்ளிகள்

i. பேபைரஸ், தோல், பனையோலை
ii. – நிறுத்தக் குறியீடுகள் பயன்படுத்தப்படாமை.
– சந்தி பிரித்து எழுதாமை.
iii. மேல்நாட்டார்
iv. சொற்களைச் சந்தி பிரித்து எழுதத் தொடங்கியமை.
v. முற்றுப்புள்ளி, அரைப்புள்ளி, காற்புள்ளி. (02 x 05 = 10 புள்ளிகள்)

**5.** உமது பாடசாலையில் சுவாமி விபுலாநந்தரது 125 ஆவது ஜனன தின விழா கொண்டாடப்படவுள்ளது. உமது பாடசாலையின் தமிழ்மன்றச் செயலாளர் எனக் கருதிக்கொண்டு, விழா தொடர்பான விவரங்கள், கலைநிகழ்ச்சிகள் முதலியவற்றைக் குறிப்பிட்டு அவ்விழாவிற்குப் பிரதம விருந்தினராக வருகை தருமாறும் விபுலாநந்தரது இலக்கிய முயற்சிகள் பற்றி உரையாற்றுமாறும் கேட்டு, பல்கலைக்கழகமொன்றின் துணைவேந்தருக்கு **100** சொற்களில் ஓர் அழைப்புக் **கடிதம்** எழுதுக.

**அல்லது**

நாம் வாழும் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருத்தல், சுத்தமாக வைத்திருக்காவிடின் ஏற்படும் பாதகமான விளைவுகள், அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அரசுடன் இணைந்து நாமும் பிற சமூக அமைப்புகளும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் ஆகியவற்றைக் குறிப்பிட்டு, **100** சொற்களில் ஒரு **துண்டுப்பிரசுரம்** எழுதுக. (15 புள்ளிகள்)

**கடிதம்**

- அமைப்பு - 05 புள்ளிகள்
- உள்ளடக்கம் - 07 புள்ளிகள்
- மொழிநடை - 03 புள்ளிகள்

மொத்தம் - **15 புள்ளிகள்**

◆ அமைப்பு
- முகவரி - 01 புள்ளி
- உள்முகவரி - 01 புள்ளி
- விளிப்பு - 01 புள்ளி
- தலைப்பு - 01 புள்ளி
- பதவி, ஒப்பம் - 01 புள்ளி

- ◆ உள்ளடக்கம்
  - சுவாமி விபுலாநந்தரது 125 ஆவது ஜனன தின விழா கொண்டாடப்படவுள்ளது எனக் குறிப்பிடல்.
  - பிரதம விருந்தினராக வருகை தந்து விபுலாநந்தரது இலக்கிய முயற்சிகள் பற்றி உரையாற்றும் படி வினயமாக வேண்டல்.

விழா தொடர்பான விடயங்கள்
- பாடசாலையின் பெயர்
- திகதி
- நேரம்
- இடம்
- பங்குபற்றும் விருந்தினர் விபரம்.

கலை நிகழ்ச்சிகள் பற்றிய விபரம்

- ◆ மொழிநடை
  - பொருத்தமான மொழி நடை
  - நிறுத்தக் குறிப்பிரயோகம்
  - வழுக்கள் இன்மை
  - சுட்டிப்பாகக் கூறுதல்.

(15 புள்ளிகள்)

துண்டுப்பிரசுரம்

| | | |
|---|---|---|
| - அமைப்பு | - | 05 புள்ளிகள் |
| - உள்ளடக்கம் | - | 07 புள்ளிகள் |
| - மொழிநடை | - | 03 புள்ளிகள் |
| **மொத்தம்** | - | **15 புள்ளிகள்** |

- ◆ அமைப்பு

| | | |
|---|---|---|
| - கவர்ச்சிகரமான தலைப்பு | - | 02 புள்ளிகள் |
| - விளிப்பு | - | 01 புள்ளி |
| - வெளியிடுபவர் பற்றிய விபரமும் திகதியும் | - | 02 புள்ளிகள் |

- ◆ உள்ளடக்கம்
- காற்று, நிலம், நீர் முதலானவற்றை மாசடையாமல் வைத்திருத்தல்.

பாதக விளைவுகள்
- நோய் ஏற்படல்.
- சுற்றாடலின் அழகு கெடல்

கட்டுப்படுத்தல்
- அரசாங்கத்துடன் இணைந்து கழிவு மீள் சுழற்சி முறையை மேற்கொள்ளல்.
- மாசடைதல் சம்பந்தமாக விழிப்புணர்வுச் செயலமர்வுகளை ஒழுங்கு செய்தல்.
- சிரமதானங்களை ஏற்பாடு செய்தல். (வீடு, பாடசாலை, சுற்றாடல்)
- ஊடகங்களைப் பொருத்தமுறத் தொடர்புபடுத்தல்.

- ◆ மொழிநடை
  கவர்ச்சியான மொழிநடை
  - பொதுமக்களை விளித்து எழுதுதல்.
  - சூழ்நிலையின் அபாயத்தை வெளிப்படுத்துதல்.
  - சொற்செறிவு

(15 புள்ளிகள்)

# தமிழ்மொழியும் இலக்கியமும் III

**நோக்கங்கள்**

1. இலக்கியப் பகுதிகளை நுட்பமாக விளங்கிக் கொள்ளும் ஆற்றலை மதிப்பிடல்.
2. இலக்கியப் பகுதிகள் தொடர்பாக வினவப்படும் சுருக்கவிடை வினாக்களுக்கு பொருத்தமானதாகவும் சுட்டிப்பாகவும் விடை எழுதும் திறனை மதிப்பிடல்.
3. செய்யுட்பகுதிகளையும் உரை நடைப்பகுதிகளையும் வாசித்து அவற்றின் பொருளை இலகுவான உரைநடையில் எழுதும் திறனை மதிப்பிடல்.
4. செய்யுள்களில் மற்றும் உரைநடைப்பகுதிகளில் இடம்பெறும் சொற்றொடர்களின் சிறப்புக்களை விளக்கும் திறனை மதிப்பிடல்.
5. இலக்கியப் பாடப்பகுதிகளை விளங்கிச் சுவைத்து அப்பகுதிகளிற் கேட்கப்படும் வினாக்களுக்குப் பொருத்தமாக விடையளிக்கும் ஆற்றலை மதிப்பிடல்.
6. பொருத்தமான மேற்கோள்கள் ஆதாரங்கள் என்பவற்றைக் காட்டி விடையெழுதுந் திறனை மதிப்பிடல்.
7. இலக்கிய இரசனையைப் பரீட்சித்தல்.

## புள்ளித்திட்டம்

**கட்டாய வினாக்கள்**

| | | | |
|---|---|---|---|
| வினா 01 | சுருக்க விடைகள் | 02 x 10 = | 20 புள்ளிகள் |
| வினா 02 | செய்யுள் + உரைநடை | | |

I, II, III, IV, V ஒவ்வொன்றுக்கும் பின்வருமாறு புள்ளி வழங்குக.

| | |
|---|---|
| (அ) | 02 புள்ளிகள் |
| (ஆ) | 02 புள்ளிகள் |
| **மொத்தம்** | **04 புள்ளிகள்** |

04 x 05 = 20 புள்ளிகள்

| | |
|---|---|
| வினா 03 | 15 புள்ளிகள் |
| வினா 04 | 15 புள்ளிகள் |

**தெரிவு வினாக்கள்**

வினா 05, 06, 07 (ஏதேனும் ஒன்று) — 10 புள்ளிகள்

**மொத்தம்** — **80 புள்ளிகள்**

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

22 T III

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය III
தமிழ் மொழியும் இலக்கியமும் III
Tamil Language and Literature III

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

## தமிழ் மொழியும் இலக்கியமும் III

**கவனிக்க:**

* அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* 1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
* இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

**1.** சுருக்கமான விடை தருக.

(i) "விதியை நோவர் தம் நண்பரைத் தூற்றுவர்
வெகுளி பொங்கிப் பகைவரை நிந்திப்பர்."
(அ) இக்கூற்றைக் கூறியவர் யார் ?
(ஆ) 'வெகுளி' என்பதன் பொருள் யாது ?

(ii) "ஏமிரோ வோரி என்பாள்"
"எந்துண்டி வஸ்தி என்பாள்"
(அ) இக்கூற்று இடம்பெறும் சிறுகதை யாது ?
(ஆ) யாருடைய கூற்றாக இது அமைகிறது ?

(iii) "மடைத்தலையில் ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு."
(அ) மடைத்தலை என்பது யாது ?
(ஆ) வாடியிருக்கும் கொக்கு யாருக்கு உவமையாகக் கூறப்படுகிறது ?

(iv) "ஆடிக்குடத்தடையு மாடும்போதே இரையும்
மூடித் திறக்கின் முகங்காட்டும்..."
(அ) இதில் கையாளப்பட்டுள்ள அணி யாது ?
(ஆ) அந்த அணி மூலம் தொடர்புபடுத்தப்படுபவை எவை ?

(v) "கிழங்கு கிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்
கிம்புரியின் கொம்பெடுத்து வெம்புதினை யிடிப்போம்"
(அ) மேற்குறித்த செயல்களைச் செய்பவர்கள் யார் ?
(ஆ) இங்கு 'கிம்புரியின் கொம்பு' என்பது எதனைக் குறிக்கிறது ?

(vi) "வளர்ந்தருவி வெட்டும் இளந்தாரிமாரை
நாவூறு வாராமற் காரும் ஐயனாரே."
(அ) இப்பாடல் எத்தொழிலோடு தொடர்புபட்டது ?
(ஆ) இப்பகுதியில் இடம்பெற்றுள்ள கிராமிய நம்பிக்கை யாது ?

(vii) "உயிருடன் சென்ற ஒருமகள் தன்னினுஞ்
செயிருடன் வந்தவிச் சேயிழை தன்னினும்"
(அ) இங்கு குறிப்பிடப்படும் உயிருடன் சென்ற ஒரு மகள் யார் ?
(ஆ) செயிருடன் வந்த சேயிழை யார் ?

(viii) இப்போது சினிமா மொழி நமக்குப் பரிச்சயமில்லாத ஒன்றாக இருக்கிறது.
(அ) 'பரிச்சயம்' என்பதன் பொருள் யாது ?
(ஆ) சினிமா மொழி என்பதில் மூன்று அம்சங்கள் உள்ளன. அவற்றுள் ஏதேனும் ஒன்றினைக் குறிப்பிடுக.

(ix) 'தத்தை விடு தூது' என்பது தி.த. கனகசுந்தரம்பிள்ளை இயற்றிய செய்யுளாகும்.
(அ) 'தத்தை' என்பதன் பொருள் யாது ?
(ஆ) தத்தை விடு தூதினூடாக ஆசிரியர் யாருடைய விடுதலை பற்றிக் குறிப்பிடுகிறார் ?

(x) "அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்
எந்தையும் உடையோம் எம் குன்றும் பிறர் கொளார்."
(அ) இங்கு 'எந்தை' என்று குறிப்பிடப்படுபவர் யார் ?
(ஆ) இங்கு குறிப்பிடப்படும் குன்றின் பெயர் யாது ?

(20 புள்ளிகள்)

## பகுதி III

01. சுருக்கமான விடை தருக.

i. அ. பாரதியார் / சுப்பிரமணிய பாரதியார் / மகாகவி பாரதியார்
ஆ. கோபம் / சினம் / சீற்றம் / முனிவு / காய்தல்

ii. அ. கம்பியூட்டர்
ஆ. காளமேகப்புலவர் / காளமேகம்

iii. அ. வாய்க்கால் / நீரோடும் வாய்க்கால்
ஆ. அடக்கமுடையவர்களுக்கு

iv. அ. சிலேடை
ஆ. பாம்பு, எள்

v. அ. குறத்தியர் / குறத்திப் பெண்கள்
ஆ. யானையின் பூணணியப்பட்ட தந்தத்தை / யானையின் தந்தத்தை

vi. அ. அரிவி வெட்டும் தொழிலோடு / உழவுத் தொழிலோடு /
அறுவடை செய்யும் தொழிலோடு

ஆ. நாவூறு தொடர்பான நம்பிக்கை
ஐயனார் தொடர்பான நம்பிக்கை (கடவுள் நம்பிக்கை)

vii. அ. பாண்டிமா தேவி
ஆ. கண்ணகி

viii. அ. பழக்கமானது / அறிமுகமானது / தெரிந்தது / தொடர்புள்ளது.
ஆ. 1. காட்சிப்படிமம்
2. ஒலி
3. படத்தொகுப்பு
(ஏதேனும் ஒன்று)

ிடுக.

ரிகள்)

ix. அ. கிளி

ஆ. பெண் விடுதலை பற்றிக் குறிப்பிடுகின்றார்.

x. அ. பாரி மன்னன் / பாரி / அங்கவை சங்கவையின் தந்தை

ஆ. பறம்பு மலை / பறம்பு

(2 x 10 = 20 புள்ளிகள்)

பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின்கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) தேம்படு பனையின் றிரள்பழத் தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவற் கிருக்க நிழலா காதே
தெள்ளிய வாலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி யாட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே
அதனால்
பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்
சிறியோ ரெல்லாம்
சிறியரு மல்லர்.

(அ) இப்பாடலில் குறிப்பிடப்படும் நாற்படைகளும் எவை ?
(ஆ) இப்பாடல் உணர்த்தும் உண்மை யாது ?

(ii) சூழ மேதி யிறங்குந் துறையிற்
சொரியும் பாலைப் பருகிய வாளை
கூழை வாசப் பலாவினிற் பாயக்
கொழும்ப லாக்கனி வாழையிற் சாய
வாழை சாய்ந்தொரு தாழையிற் றாக்க
வருவி ருந்துக் குபசரிப் பார்போல்
தாழை சோறிட வாழை குருத்திடுஞ்
சந்திர சூடர்தென் னாரிய நாடே.

(அ) இப்பாடலில் நாட்டு வளத்தை விவரிப்பதற்கு எடுத்தாளப்பட்டுள்ள விடயங்கள் யாவை ?
(ஆ) இப்பாடலில் இடம்பெற்றுள்ள உவமையின் பொருத்தப்பாட்டினை விளக்குக.

(iii) தம்மனைக்கோர் பசுவேண்டிற் றாம்பலகாற் பார்த்திருந்தும்
பின்னுந் துணிவிலராய்ப் பேதுறுதல் மாந்தர் குணம்
என்னே மணவினையே லிமைப்பொழுதி லேமுடிப்பார்
சின்னப் பதுமைகொடு சிறார் செய்மணம் போலுமரோ
தெரிவையவட் கிம்மாற்றஞ் சீரக்கிளியே கூறுதியால்

(அ) இப்பாடலில் கவிஞர் மாந்தரது குணத்தை எவ்வாறு கண்டிக்கிறார் ?
(ஆ) ஆராயாது செய்யும் திருமணத்தை எதற்கு உவமிக்கிறார் ?

(iv) கைவேல் - எறிகிறவேல் - இறகுள்ள அம்பு - இல்லாத அம்பு - வாள் - சக்கரம் - இவற்றிற்கு மேலே தெய்வப் படைகளிலுங் கைவைக்கின்ற சமயம்; அந்தச் சமயம் பிறிற்றோ கட்சிக்குப் பேச வந்தவர்கள் எல்லோரும் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் உள்ள பிரபல வழக்கறிஞர்கள், வாதம் இல்லா இடத்திலும் வாதம் வருவிக்கக்கூடியவர்கள், நாவலர் அவர்களின் காசம் அவர்களுக்கு எதிர்பாராத அனுகூலம் அளித்தது, பிறிற்றோவை ஆகாசத்திலே தூக்கிக்கொண்டு போய் வைத்துவிட்டார்கள் அவர்கள். இராமநாதன் கட்சி சோர்ந்து போய்விட்டது.

(அ) வாதம் உச்சக்கட்டம் அடைந்துவிட்டதை ஆசிரியர் எவ்வாறு விவரிக்கிறார் ?

(ஆ) 'வாதம் இல்லா இடத்திலும் வாதம் வருவிக்கக்கூடியவர்கள்' என்பதன் மூலம் உணர்த்தப்படுவது யாது ?

(v) நாம் இலக்கியங்களைப் படிக்கின்றோம். அங்கே என்ன காண்கின்றோம்? இலட்சியங்களைக் காண்கின்றோம். இலட்சியங்களைக் கடைப்பிடித்தொழுகிய இலட்சியவாதிகளைக் காண்கின்றோம். எதிர்மறை முகத்தால் இலட்சிய வாழ்வினை உயிர்பெறச் செய்த ஏனையோரையும் காண்கின்றோம். நிறைவுடைய கதாபாத்திரங்களும் குறைவுடைய கதாபாத்திரங்களும் நம்மை இலட்சியமென்கின்ற குறிக்கோளை நோக்கிச் செலுத்துவதை நாம் இலக்கியங்கள் வாயிலாக உணர்ந்து கொள்ளுகின்றோம். இந்த உணர்ச்சி நம்மிடையே பிறவாதபோது நாம் இலக்கியங் கொண்டு இடர்ப்படுவோமேயன்றி, இன்பங் காண்பதில்லை. இலக்கியத் திறவுகோலை நாம் பெறுதல் வேண்டும். பெற்றால் இன்பங் காண்போம்.

(அ) இங்கு இலட்சியவாதிகள் யார் என்று கட்டுரையாசிரியர் குறிப்பிடுகின்றார் ?

(ஆ) இலக்கியத்தில் இன்பம் காண்பதற்கு யாது செய்ய வேண்டுமெனக் கட்டுரையாசிரியர் குறிப்பிடுகின்றார் ?

(20 புள்ளிகள்)

02.

i. அ. யானைப்படை, தேர்ப்படை, குதிரைப்படை, காலாட் படை

ஆ. உருவத்தை வைத்து யாரையும் மதிப்பிட முடியாது /
உருவத்தால் பெரியோரெல்லாம் அறிவில்/ பயனில் / குணத்தில் பெரியவர்களாகமாட்டார்கள்.
உருவத்தால் சிறியோரெல்லாம் அறிவில் / பயனில் / குணத்தில் சிறியவர்களாக மாட்டார்கள்.

ii. அ. நீர்நிலைகள்
பால் சொரியும் பசுக்கள்
பயன் தரும் மரங்கள்

ஆ. உவமை
"வரு விருந்துக் குபசரிப்பார் போல் தாழை சோறிட வாழை குருத்திடும்"

உவமையின் பொருத்தப்பாடு
விருந்தினர்களை உபசரிப்பவர்கள் போல தாழையானது பூக்களைச் சோறு போலச் சொரிய, வாழையானது அதனைப் பெறுவதற்காகத் தனது குருத்து இலையை விரிக்கிறது.

iii. அ. தமது வீட்டுக்கு ஒரு பசு வாங்குவதென்றால் கூட பலமுறை யோசித்து, வாங்கும் துணிவின்றித் தடுமாறும் மனிதர்கள், பெண்ணின் திருமணம் என்றால் யோசிக்காது கண்ணிமைப் பொழுதினிலே முடித்து விடுவார்கள்.

ஆ. சிறிய பொம்மைகளைக் கொண்டு சிறுவர்கள் விளையாடும் பொம்மைக் கலியாணத்திற்கு உவமிக்கிறார்.

IV. அ. வார்த்தைப் பிரயோகங்களை ஆயுதங்களுக்கு ( கைவேல், எறிகிற வேல், இறகுள்ள அம்பு, வாள், சக்கரம்) ஒப்பிட்டு இவற்றுக்கு மேலே தெய்வப் படைகளிலும் கைவைக்கிற சமயம் என விவரிக்கிறார்.

பிரிற்றோவின் கட்சியின் வாதங்கள் உச்சத்துக்கு வந்துவிட்டதாகவும், இராமநாதன் கட்சி சோர்ந்து போய்விட்டது என்றும் குறிப்பிடுவதன் மூலம். (என எழுதினால் 1 புள்ளி)

ஆ. விவாதிக்கக் கூடிய விடயம் இல்லாவிட்டாலும் அதனை ஒரு விவாதமாக வாதிடுவார்கள்.

V. அ. இலட்சியங்களைக் கடைப்பிடித்து ஒழுகுவோரை

ஆ. இலட்சியங்கள் உணர்த்தும் குறிக்கோளை உணர்ந்து அனுபவித்தல் வேண்டும்.

(4 x 5 = 20 புள்ளிகள்)

3. பாரதியார் சுயசரிதையில்,

(அ) காதலியை எதிர்பார்த்தலும் அவளின் பார்வை கிட்டியதில் ஏற்பட்ட மகிழ்வும்

(ஆ) முயற்சியில் முழுமனதோடு ஈடுபடாது தோல்வியைத் தழுவுவோரின் நடத்தைகளும்

விவரிக்கப்படுமாற்றினை விளக்குக.

**அல்லது**

கிருட்டினன்தூதுச் சருக்கத்தில்,

(அ) தருமனுடைய பொறுமையும்

(ஆ) வீமனின் ஆவேசமும்

வெளிப்படுமாற்றினை விவரிக்குக. (15 புள்ளிகள்)

அ. எதிர்பார்த்தல்

- காதலி, தண்ணீர் எடுக்கச் செல்லும் வேளையெல்லாம் அவளைக் காணக் காத்திருத்தல்.
- தேச பக்தர்களை அழித்து விட, ஆட்சி செய்யும் மன்னர்களின் படை வீரர்கள், காத்திருப்பது போல தானும் காத்திருந்ததாக உவமை மூலம் கூறுதல்.
- காணும் ஆசையோடு காத்திருந்து அவள் போகின்ற வழி முழுவதும் அவளது பின்னழகினைக் கண்கள் இரசித்து மகிழல்.

  தேரின் சில்லில் ஒட்டிக்கொண்ட அகப்பட்ட கொம்பில்லாத சிறு விலங்கொன்று தேர் உருளும் இடமெல்லாம் சில்லுடன் சேர்ந்து செல்லல் போல் அவளது நினைவுகளால் கோர்க்கப்பட்ட மனத்துடன் செல்வதாகக் கூறுதல். (05 புள்ளிகள்)

பார்வை கிட்டியதில் மகிழ்வு

- அவளது பார்வை கிட்டியதும் ஐம்புலன்களும் அழியப்பெற்று புதிய பிறவியினைப் பெற்றதாக உணர்கிறார்.

  "பூத்த ஜோதி வதனம் திரும்புமேல்

  புலனழிந்தொரு புத்துயிரெய்துவேன்" (03 புள்ளிகள்)

ஆ. தோல்வியைத் தழுவுவோரின் நடத்தைகள்

- தலைவிதியை நொந்து கொள்வர்
- நண்பரை ஏசுவர்.
- கோபமிகுதியால் பகைவர்களை அவமானப்படுத்துவர்.
- கபட வேலைகளில் ஈடுபடுவர்.
- பொய்யான சாத்திர சம்பிரதாயங்களைக் கூறுவர்.
- சாதகங்களைப் புரட்டிப் பார்த்தல்.
- பொய்மை கலந்த புத்தியினால் கடவுள் இல்லையென்று கூறுவர்.

  (பாடல் அடிகளை மட்டும் எழுதினால் 4 புள்ளிகள்) (07 புள்ளிகள்)

(5 + 3 + 7 = 15)

அல்லது

அ. தர்மனின் பொறுமை

போரை விரும்பாது பொறுமை காத்த தருமன் கிருஷ்ணரைத் தூது செல்லுமாறு வேண்டுகின்றான்.

- சினத்துடன் போர் புரிந்தால் இரண்டு பக்கத்தினரும் இறந்து விடுவோம் சேர்ந்து வாழ சமாதானம் உண்டாகத் தூது செல்வாயாக எனல்.
- போரில் தங்கள் குரவர்கள், உறவினர்கள், தம்பியர்கள் ஆகியோரைக் கொன்ற பின் ஆட்சியைப் பெறுவதிலும் பார்க்கக் காட்டில் வாழ்தல் நன்று எனல்.
- தூது உரைத்த பின்னர் நாட்டின் பாகத்தையும் அதிகாரங்களையும் தர மறுத்தால் தான் போர் புரிந்து நாட்டைப் பெறுவது வசையாகாது எனல்.
- பாதிநாடு, ஐந்து ஊர்கள், ஐந்து இல்லங்கள் எனக் கேட்டு அவற்றைத் தர மறுத்தால் போர் என எவ்வளவு தூரம் விட்டுக் கொடுக்க முடியுமோ அவ்வளவு தூரம் விட்டுக் கொடுத்தல்.
- ஆத்திரத்துடன் தன்னை அவதூறாகப் பழித்துப் பேசிய தம்பி வீமனை அமைதிப்படுத்தி, அவனது வீரத்தைப் புகழ்ந்து, "குற்றம் பார்க்குங்கால் சுற்றம் இல்லை" எனக் கூறி, "ஒரு குலத்துப் பிறந்தோர் உடன் வாழும் வாழ்வே உறுதியானது. அது இன்றேல் வசை ஏற்படும் எனல்.
- அன்று சபையில் அறியாமை காரணமாகத் துரியோதனன் முதலியோர் கூறிய சொற்கள் நமக்கு அவமானமன்று, அவமானம் பிறரால் உண்டாவது ; தமரால் உண்டாவது அவமானமாகாது (தன் கை தனது கண்களில் படுதல் குற்றமன்று) எனல்.
- போர்த்தொழில், மன்னர்க்குரிய இறுதி உபாயமே என உரைத்தல். (08 புள்ளிகள்)

ஆ.வீமனின் ஆவேசம்

- துரியோதனனிடம் தூது சென்று சமாதானம் பேசுமாறு தருமன், கண்ணனைக் கேட்டதை மிகவும் வெறுத்துப் பேசியவன்.
- வெஞ்சினம் மனத்தில் மூளமூள, நாவின் உரை குளற விரைவாக எழுந்து வார்த்தைகளைக் கடுமையாகக் கூறுகிறான் என்ற கவிஞர் கூற்றின் மூலம் ஆவேசம் புலப்படல்.
- தனது அண்ணனையே மானம் இல்லாதவன் என்று கூறுதல்.
- கௌரவர் சபையில் திரௌபதியைத் துச்சாதனன் துகிலுரித்த போது எம்மை அமைதி கொள்ளுமாறு கூறியதன் மூலம் குல மரபுக்கும் நமக்கும் தீராப்பழியை ஏற்படுத்தியவன் என அண்ணனையே குற்றம் சாட்டுதல்.
- துரியோதனின் கொடுமையிலும் தருமனின் அருளுக்காக அஞ்சுவதாகக் கூறி அண்ணனைக் கடிதல்.
- துரியோதனன் உயிரைப் போரில் கவர்ந்து விண்ணுலகு அனுப்புவதுடன், நாட்டை மீட்டுத் தருமருக்குத் தருவதாக ஆவேசமாகக் கூறுதல்.
- வீரனாகிய நான் வீரமற்ற தருமனுக்குத் தம்பியாகப் பிறப்பது தகுதியோ எனச் சினமடைதல்.
- போரில் துரியோதனனையும் அவனுக்கு துணைவரும் அரசர்களினையும் வென்று நாட்டை ஆளாமல் இரந்து தூது செல்லுமாறு கேட்பது நாம் முன்பு பட்ட துன்பங்களையே மிஞ்சியது எனல்.
- திரௌபதியினதும் தன்னுடையதும் சபதங்கள் நிறைவேறத் துரியோதனிடத்தில் தான் தூது செல்கிறேன் என்று ஆத்திரப்படல். (07 புள்ளிகள்)

(08 + 07 = 15 புள்ளிகள்)

**4. மூத்தம்மா** என்ற சிறுகதையில்,

(அ) கதைக்கள வர்ணனை

(ஆ) மூத்தம்மா என்ற பாத்திரப்படைப்பு

என்பன அமைந்திருக்கும் விதத்தை விளக்குக.

**அல்லது**

**அற்றைத்திங்கள்** என்ற நாடகத்தில்,

(அ) புலப்பெயர்வின் அவலம்

(ஆ) நாடகாசிரியரின் படைப்பாற்றல்

என்பன புலப்படுமாற்றினை விளக்குக.

(15 புள்ளிகள்)

04. மூத்தம்மா என்ற சிறுகதையில்

**அ. கதைக்கள வர்ணனை**

மூத்தம்மா என்ற சிறு கதையில் ஒரு கடற்கரையோரக் கிராமம் களமாக அமைந்துள்ளது. அக்கிராமம் தொடர்பாகக் கதை ஆசிரியர் விபரிப்பது.

- இயற்கைக் காட்சிகள்
  (மேகங்கள் நிலவை மூடி ஆலிங்கனம் செய்தல்......)
- கிராமத்தின் இயல்பான காட்சிகள், நடவடிக்கைகள், (மஞ்சோனா மரத்தில் பக்குல் கத்துதல்......)
- களத்திற்குப் பொருத்தமான உரை நடைப் பிரயோகம்.

(07 புள்ளிகள்)

**ஆ. மூத்தம்மா என்ற பாத்திரப் படைப்பு**

- மூத்தம்மா என்ற பெயரின் பொருத்தப்பாடு (தலைமைத்துவம்)
- அவளின் கிராமியம் சார்ந்த நாளாந்த நடவடிக்கைகள் (குடும்பப் பெண்)
- பேரப் பிள்ளைகளிடம் காட்டுப் பரிவின் தொடர்ச்சி (பரிவுடைய பெண்)
- பேரப்பிள்ளைகள் அவளிடம் காட்டும் அன்பு.
- ஊர்க்காரர் அவளிடம் கொண்ட மதிப்பு (நன் மதிப்புடைய பெண்)
- பேரப் பிள்ளையிடம் அவளின் செல்வாக்கு ( தனது நடவடிக்கைகள் ஊடாக புதிய தலை முறையிடம் ஆளுமையை விதைத்துச் செல்லல்.)

(08 புள்ளிகள்)

(07 + 08 = 15 புள்ளிகள்)

அல்லது

**அ. புலம் பெயர்வின் அவலம்**

- பாரியின் பறம்பு மலையை கைப்பற்றியமையும் பாரியின் இறப்பும் நிகழ்ந்ததன் பின்னர் பாரி மகளிர் பறம்பு மலையை விட்டு புலம் பெயரும் சூழல் ஏற்படுகிறது. அவர்கள் கபிலருடன் புறப்படுகிற சூழலை அடிப்படையாகக் கொண்டு புலம் பெயர்வின் அவலம் வெளிப்படுத்தப்படல்.
- நாட்டுப் புறத் தலாட்டுப் பாடலின் ஊடாக மன அவலத்தை வெளிப்படுத்துதல்.

  அழகான நடை வண்டி
  அசைந்தாடும் கிலு கிலுப்பை.........

- அங்கவை, சங்கவை ஆகியோரின் கூற்றுகளாக அமைவன.
  - பறம்பு மலையின் பால் வார்க்கும் நிலவை எவ்வாறு எடுத்துச் செல்வது.
  - இந்தப் புன் செய் நிலங்களை விட்டுட்டுப் போக வேண்டியதுதான்.
  - குடிசைகளை விட்டுப் போக வேண்டியது தான். [3]

கபிலர் வாயிலாக

- இப்போது மலையைப் பிரிவது மலையை விடக் கூடுதலாகக் கனக்கிறது.
- பறம்பு மலை சுனை நீரை முடிந்த மட்டும் குடியுங்கள்.
- மலைப் பூக்களின் மணங்களை நுகருங்கள் என்று குறிப்பிடுகிறார் [3]

(09 புள்ளிகள்)

ஆ. நாடகாசிரியரின் படைப்பாற்றல்.

- புறநானூற்றுச் செய்யுள் வடிவத்திற்கு புது வடிவம் கொடுத்தல். நாடக வடிவம்
- களச்சித்திரிப்பு
  பறம்பு மலை மீதான முற்றுகை, பிரிவு ஆகியவற்றைக் கவிதையாகவும் உரை நடையாகவும் சித்திரித்தல்.
- பாத்திரப்படைப்பு
  பண்டைய கதையொன்றில் குறிப்பிடப்படும் பாத்திரங்களைப் படைத்து அவற்றின் ஊடாகக் கதையை நகர்த்தல்.
- உணர்வலைகள்
  புலம் பெயர் நிலையின் அவலத்தையும், சோகத்தையும் இணைத்து வெளிப்படுத்தல்.
- மொழி நடைப் பிரயோகம் (செம்மொழிச் சொற்கள்) (06 புள்ளிகள்)
- சமகாலத்துடன் தொடர்புபடுத்துதல்.

(பாடல் அடிகள் மட்டும் எழுதின் 4 புள்ளிகள்)

(09 + 06 = 15 புள்ளிகள்)

● **5, 6, 7** ஆகிய வினாக்களுள் ஏதாவது **ஒன்றைத்** தெரிவுசெய்து விடை எழுதுக.

**5. தேயிலைத் தோட்டத்திலே** என்ற கவிதையில்,

(அ) தொழிலாளரின் உழைப்பும்

(ஆ) அவர்கள் மீதான கவிஞரின் பரிவும்

வெளிப்படுமாற்றை விளக்குக. (10 புள்ளிகள்)

**6. பங்கப் பழனத்து...** என்று தொடங்கும் பாடலில்,

(அ) நாட்டுவளம், மன்னனின் ஆற்றல் என்பனவும்

(ஆ) தலைவன்மீது தலைவி கொண்ட காதலும்

விவரிக்கப்படுமாற்றினை எடுத்துக்காட்டுக. (10 புள்ளிகள்)

**7. தமிழ்ப் பண்பாடு** என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு,

(அ) தமிழர் பண்பாட்டின் குறிக்கோள்கள் யாவை எனக் குறிப்பிடுக.

(ஆ) அவற்றுள் உலக மனப்பான்மை என்ற பண்பாடு பற்றி விவரிக்குக. (10 புள்ளிகள்)

5. அ. தொழிலாளர் உழைப்பு

- உழைப்பைக் கொடுத்தும் உடலைப் பசளையாக்கியும் மண்ணை உயிர்ப்பித்தவர். ( வளம் பெறச் செய்தவர்.)
- பரம்பரை பரம்பரையாக உழைத்தல்.
- தேயிலைச் செடியின் அடியில் புதைக்கப்பட்டிருக்கும் அப்பாவின் புதைமேட்டில் மகன் நின்று உழைத்தல்.
- தொடர்ந்து உடலை வருத்தி உழைத்தும் ஏழையாக இருத்தல்.
- இங்குள்ளோர் வசதியாக வாழ்வதற்காகத் தமது உயிரைத் தருதல். (04 புள்ளிகள்)

ஆ. அவர்கள் மீதான கவிஞரின் பரிவு

- புழுதியில் புதைந்த தொழிலாளர்களைப் போற்றிப் பாடிய இரங்கற்பா இல்லை.
- கல்லறை, நினைவு நாள் இல்லாமை.
- மனம் கசிந்து அன்போடு நினையாமை.
- புதைமேட்டில் ஒரு காட்டுமலரையாவது பறித்துப் போடவில்லை என்பதன் மூலம் ஆதங்கத்தை வெளிப்படுத்தல்.
- கடின உழைப்பைத் தந்து உயிரை அர்ப்பணித்தவர்களை நினைக்காத மனிதர்களை என்னே மனிதர் என ஆற்றாமையை வெளிப்படுத்தல்.
- மனிதரின் இந்தச் செயலிற்காக வெட்கப்பட்டு இறைவன் பசும்புல்லால் தரையை மறைத்திருக்கிறான் எனத் தனது கருத்தை ஏற்றிச் சொல்லல். (06 புள்ளிகள்)

(04 + 06 = 10 புள்ளிகள்)

6. அ. நாட்டு வளம்

- நாட்டிலுள்ள நிலவளம், நீர் வளம் தாவர வளம் என்பவற்றின் மூலம் வளத்தைக் காட்டுதல்.
- குரங்குகள் பலாக்கனிகளைப் பறித்து எறிதல்.
- உழவர் சங்குகளால் குரங்குகளுக்கு எறிதல்.
- பதிலுக்கு செவ்விளநீரைப் பிடுங்கி எறிதல்.

(வயல், சங்குகள், கனிகள் செவ்விளநீர் என்பவை காட்சிப்படுத்தல் மூலம் வளத்தை எடுத்துக்காட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.) (04 புள்ளிகள்)

மன்னனின் ஆற்றல்

- கொங்கு தேசத்தவர்களைப் போரிலே கொன்று அவர்களுக்குச் சொர்க்கத்தை அளித்தவன் என்பதன் மூலம் மன்னனின் வீரமும், படைத்திறனும் எடுத்துக் காட்டப்படல்.
- இராசகுல திலகமாகப் போற்றப்படல். (02 புள்ளிகள்)

ஆ. தலைவன் மீது கொண்ட காதல்.

- தலைவனைப் பிரிந்த தலைவி ஒருத்தி மாலை நேரத்தில் அடைகின்ற துன்பம்
  - வெம்மை நிறைந்த சந்திரன் காதலைத் தூண்டி வருத்துதல்.
  - மன்மதன்கணைகள் காதலை ஏற்படுத்தி வருத்துதல்.
  - உடல் மெலிதல், கண்ணீர் சொரிதல். (04 புள்ளிகள்)

(04 + 02 + 04 = 10 புள்ளிகள்)

7. தமிழர் பண்பாடு

அ. - தமிழர் பண்பாட்டின் குறிக்கோள்கள்

- பரந்த உலக மனப்பான்மை
- விருந்தோம்பல்
- பிறரன்பு
- ஈகை, தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்.
- என்கடன் பணி செய்து கிடப்பதே.
- மானமென்றால் உயிரையும் கொடுத்துக் காப்பாற்றும் வேட்கை.
- மனத்தூய்மை, விடா முயற்சி
- யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற மனநிலை
- உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்.

(எவையேனும் 4) (04 புள்ளிகள்)

ஆ. உலக மனப்பான்மை

- மேற்றிசை நாடுகளோடும் கீழ்த்திசை நாடுகளோடும் இந்தியாவின் வட பாகத்தோடும் பண்டமாற்று வணிகத்தில் ஈடுபட்டமை.
- சங்க இலக்கியங்கள் காட்டும் வணிகச் செய்திகளூடாக 'யாதும் ஊரே யாவரும் கேளிர்.......' என்ற மனப்பான்மையை வளர்த்தெடுத்தல்.
- சமணம், பௌத்தம் முதலிய சமயங்களை தமிழ்நாட்டில் வரவேற்றமை.
- பிற மக்களின் நலத்தைக் கருதும் பண்பு, தமக்கென வாழா பிறர்க்குரியாளன் என்னும் கோட்பாட்டை வளர்த்தமை.

(06 புள்ளிகள்)

(04 + 06 = 10 புள்ளிகள்)